# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைத் தாதிமார் பேரவை (திருத்தச்)சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஒற்றோபர் மாதம் 07 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைத் தாதிமார் பேரவை (திருத்தச்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 3 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ 8/2003
4816

## 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைத் தாதிமார் பேரவைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைத் தாதிமார் பேரவை (திருத்தம்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைத் தாதிமார் பேரவைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (ii) ஆம் பந்தியில், “சுகாதார அமைச்சினதும் போதனா வைத்தியசாலைகள் அமைச்சினதும்” என்ற சொற்களுக்குப் பதிலாக “சுகாதார அமைச்சினதும் மாகாண பகிரங்க சேவையினதும்” என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (iii) ஆம் பந்தியில், “சுகாதாரத் திணைக் களத்தின்” என்ற சொற்களுக்குப் பதிலாக, “சுகாதார அமைச்சினதும் மாகாண பகிரங்க சேவையினதும்” என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (iv) ஆம் பந்தியில், “சுகாதாரத் திணைக் களத்தின்” என்ற சொற்களுக்குப் பதிலாக, “சுகாதார அமைச்சினதும் மாகாண பகிரங்க சேவையினதும்” என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (v) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

2 – PL 000569 – 1,250 (2005/08)

"(V) (அ) மாகாண பகிரங்க சேவையில் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளவரும் ;

(ஆ) பன்னிரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்குத் தாதித்தொழிலில் அனுபவம் கொண்டுள்ளவரும் ; அத்துடன்

(இ) விதித்துரைக்கப்பட்ட பட்டப்பின்படிப்புத் தகைமையொன்றினைப் பெற்றுள்ளவரும்,

மாகாண பகிரங்க சேவைகளிலுள்ள தாதித்தொழில் அலுவலர்களால் தெரிவுசெய்யப்பட்டவருமான பதிவுசெய்யப்பட்ட தொழில்புரியும் ஒரு தாதி ;";

(5) அப்பிரிவின் (vii) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(vii) சுகாதாரத் திணைக்களம் மற்றும் மாகாண பகிரங்க சேவையில் தாதித்தொழிலில் ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டு அனுபவத்தைக் கொண்டுள்ள பதவி நிலைத் தாதிமார்களிடையேயிருந்து, சுகாதாரத் திணைக்களத்தில் மற்றும் மாகாண பகிரங்க சேவையிலுள்ள பதவிநிலைத் தாதித்தொழில் அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து பதிவுசெய்யப்பட்ட தொழில்புரியும் தாதிமார் ;"

(6) அப்பிரிவின் (X) என்னும் பந்தியினை நீக்குவதன் மூலமும் ;

(7) அப்பிரிவின் (XV) என்னும் பந்தியினை நீக்குவதன் மூலமும் ; அத்துடன் ;

(8) அப்பிரிவின் (xvi) ஆம் பந்தியில் "தொழில் அலுவலர்களால் ;" என்ற சொற்களுக்குப் பதிலாக, "தொழில்அலுவலர்களால் மற்றும் மாகாண சபைகளின் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சேவைபுரிகின்ற மாகாண பகிரங்க சேவையைச் சேர்ந்த தாதித்தொழில் அலுவலர்களால் ;" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்